செ.வெ.எண்: 286 நாள்: 4.4.2020

**பொதுமக்கள் வீட்டிலிருந்தபடியே தங்களது அத்தியாவசிய தேவைகளுக்கு இணைய வழியின் வாயிலாக மின் வாகன அனுமதி சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

பொதுமக்கள் வீட்டிலிருந்தபடியே தங்களது அத்தியாவசிய தேவைகளுக்கு இணைய வழியின் வாயிலாக மின் வாகன அனுமதி சீட்டு வழங்க இணைய முகவரியில் பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் கண்காணிக்கவும், நோய் பரவாமல் கட்டுப்படுத்திடவும் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகள் மாவட்ட நிர்வாகத்தினால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக மத்திய அரசால் நாடு முழுவதும் கடந்த 24.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அத்தியாவசிய பணிகளுக்கான தனியார் சரக்கு வாகனங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் செயல்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான உணவுப் பொருள்கள், மருத்துவ பொருள்கள் மற்றும் கிருமி நாசினிகள் உள்ளிட்ட பொருள்களை ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களுக்கு மட்டும் வாகன அனுமதி சீட்டு வழங்கப்பட்டு வந்த நிலையில், பொதுமக்கள் வீட்டிலிருந்தபடியே தங்களது அத்தியாவசிய தேவையான திருமணம், மருத்துவ சிகிச்சை மற்றும் இறப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக இணைய வழியின் வாயிலாக மின் வாகன அனுமதி சீட்டு வழங்க ஏதுவாக புதுக்கோட்டை மாவட்ட இணையதளமான www.pudukkottai.in என்ற இணைய முகவரியில் பொதுமக்கள் விண்ணப்பித்து மின் வாகன அனுமதி சீட்டு பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**